


ரன், தூள் வெற்றிக்குப் பிறகு வித்யாசாகர் காட்டில் இசை மழை! தமிழ், தெலுங்கு, மலையாளம் என்று பிளேனில் பறந்து கொண்டிருக்கிறார். ஓர் இரவு நேரத்தில் (ரஹ்மான் ஸ்டைல்!) தன் தி.நகர் ரிக்கார்டிங் தியேட்டர் வாசலில் பாடகர்கள் காத்துக் கொண்டிருக்க, நேரம் ஒதுக்கியிருந்தார். இந்த மனிதரிடம் உள்ள விசேஷம்.. அவரை உராயும்படி கேள்வி கேட்டாலும் எந்த ஈகோவும் இல்லாமல் இயல்பாக பதில் சொல்வது!

இன்றைய சினிமா மியூஸிக் ஒரே இரைச்சலாக, இளைய தலைமுறையின் உணர்வுகளைத் தூண்டுவதுபோல இருக்கிறது. நல்ல மெலடிகளைக் காட்டாமலேயே இளசுகளை வேறு பாதைக்கு அழைத்துப் போகிறீர்களா?



"இதுபற்றி நானே வருத்தப்பட்டிருக்கேன். இது எங்கிருந்து, எதனால் இப்படி வந்தது என்று யோசிச்சிருக்கேன். எனக்கே பதில் கிடைக்கலை! போதுமான மெலடிகள் கொடுக்கவில்லை என்பது புரிகிறது. ஸ்பீடு டான்ஸுக்கு ஏற்ற டப்பாங்குத்துகள் ஹிட்டானவுடன் அந்தப் பக்கம் டிரெண்ட் திசைமாறிப் போய்விட்டதாகத் தோணுது. என்னைப் பொறுத்தவரை நான் என்னிக்குமே மெலடிகள் கொடுக்கத் தவறவில்லை. இரைச்சல் மியூசிக் என்கிற குற்றச்சாட்டுக்கு இன்னொரு முக்கிய காரணம் டி.வி. நாங்கள் போடும் நல்ல பாடல்களைப் போடாமல், டப்பாங்குத்து டான்ஸ் பாடல்களைத்தானே தேர்ந்தெடுத்து அடிக்கடி போடுகிறார்கள். மாற்றி மாற்றி அதையே எல்லா சேனலும் போடுவதைப் பார்க்க கஷ்டமாக இருக்கு! ஜனங்களின் ரசனையை உயர்த்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு அவர்களுக்கு மட்டும் இல்லையா? மொத்தத்தில் இங்கு இசை ஜீஷீறீறீஷுமீமீ ஆயிடுச்சு. பத்து வருஷம் முன்ன திரையுலகில் புதிய இசைவடிவங்கள் வந்த போது நான் போட்ட, 'மலரே.. மௌனமா' இன்னைக்கும் நிக்குது!"

அந்தக் காலத்தில் மகாதேவன், எம்.எஸ்.வி. போன்ற இசையமைப்பாளர்களிடம், டைரக்டர் சிச்சுவேஷன் சொன்னவுடன், இதற்கு ஒரு ஆனந்த பைரவி, அல்லது சஹானா பொருத்த மாக இருக்கும் என்று ராகங்களை யோசித்துத் தேர்வு செய்தார்கள். ஆனால், இன்று பல இசையமைப்பாளர்கள் சூட்கேஸ் நிறைய மேற்கத்திய இசை ஆல்பங்களை நிரப்பிக்கொண்டு அலைகிறார்கள் என்றால் ஒப்புக்கொள்வீர்களா?

(சிரிக்கிறார்) "யார் எப்படியோ நான் அப்படியில்லை சார்! நான் எப்பவுமே லீடராக

இருக்கத்தான் ஆசைப்படுகிறேன். ஒருவரை பின் தொடர ஆசைப்படவில்லை. அப்படி ஒருவரது இசையை ஃபாலோ செய்திருந்தால், எப்பவோ மேல வந்திருப்பேன். ஒரிஜினலாக கம்போஸ் செய்ததால்தான் இவ்வளவு காலம் காத்திருந்து வந்திருக்கேன்.”

சரி, இவ்வளவு பேசும் நீங்கள் தூள் படத்தில் டாலர் மெஹந்தி பாடும் பஞ்சாபி சாங்கை உருவி ‘அருவா மீசை’யில் பயன்படுத்தியிருக்கிறீர்கள். குண்டு பொண்ணு, அப்படியே ‘அக்வா’ ஆல்பத்தில் வரும் பார்பிகேர்ள் பாட்டு. இதெல்லாம் சரியா?

“முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். இன்ஸ்பயரேஷனுக்கும் திருடறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. பாபிகேர்ள் பாட்டை, நம்ம ஊர் நாட்டுப்புற மெட்டில் வைச்சா எப்படியிருக்கும் என்று யோசிச்சேன். காரணம், அக்வா இளசுகள் மத்தியில் பாப்புலரா இருக்கு. அதேபோலத்தான் பஞ்சாபி பாடலும். நம்ம ஸ்டைலில் நிறைய மாற்றம் இருக்கும். ‘அன்பே சிவம்’ படத்தில் ‘கெல்டிக் மியூசிக்’ பயன்படுத்தியிருப்பேன். காரணம், அந்தப் பாடல்வரிகள் உலகத்திற்கே பொதுவானது. ஆகவே உலக இசைக்குக் கொண்டு போக நினைத்து அப்படிச் செய்தேன். கெல்டிக் என்பது ஒரு வெளிநாட்டு இசைவடிவம்! ‘கண்ணுக்குள்ள கெழுத்தி’ பாடலில் நம்ம ஊர் நாட்டுப்புற மெட்டில் மேற்கத்திய ரிதமைச் சேர்த்திருப்பேன்.”

நம்முடைய சாஸ்த்திரிய இசையில் எத்தனையோ ராகங்கள் இருக்கும் போது ஏன் திரும்பத் திரும்ப ஒரு பத்துப் பதினைந்து ராகங்களையே இசையமைப்பாளர்கள் பயன்படுத்துகிறீர்கள்? தெரியவில்லையா அல்லது நிறைய படங்களை ஒப்புக் கொள்வதால் வரும் பிரச்னையா?



“இந்தப் படத்துல ஒரு பாட்டு ஹிட்டாச்சுன்னா, அதே மாதிரியான ஒரு பாடலை அடுத்த படத்தில் நான் கம்போஸ் பண்றதில்லை. மற்றவர்களைப் பற்றி நான் சொல்ல முடியாது. தெரியாமலும் இருக்கலாம். தவிர, அப்படி அழகான வெவ்வேறு ராகங்களைப் பயன்படுத்தத் தகுந்த சிச்சுவேஷனை படத்தில் முதலில் வைப்பதில்லையே! எப்படி அப்புறம் ரேவதியையும், யதுகுள காம்போதியையும் போடறது? (சிரிக்கிறார்) டைரக்டர்களுக்கு பாப்புலர் மியூஸிக்தான் வேணும். இங்க பிழைப்புதான் முக்கியம். எந்த டைரக்டரும் இந்த ராகம் அல்லது இப்படியொரு ட்யூனில் பாட்டு வேணும் என்று கேட்பதில்லை. இந்த விஷயத்தில் எந்த டைரக்டருக்கும் ஞானம் இல்லை.

இந்தப் போட்டி உலகத்தில் எங்கள் கைகள் கட்டப்பட்டுள்ளன!”

படம் சொதப்பியதால் நீங்கள் ரொம்ப கஷ்டப்பட்டு இசையமைத்த நல்ல ட்யூன்களும் எடுபடாமல் போகும்போது உங்கள் மனநிலை எப்படியிருக்கும்?

“எனக்கு இதுவரை ஏற்பட்டதே அப்படிப்பட்ட அனுபவம்தான். இன்னிக்குத்தான் என் படமும், பாட்டுகளும் ஓடுது... இன்னிக்கு நான் நிற்பதற்குக் காரணமே தோல்விப் படங்களில் கூட நல்ல பாட்டுகள் கொடுத்ததால்தான்.”

யுவன்சங்கர்ராஜா, இமான் போன்ற இன்றைய இளைய தலைமுறை இசையமைப்பாளர்களில் யார் பாட்டுக்களை அதிகம் கேட்பீர்கள்?

“நான் அதிகமா கேட்கறதில்லை. அவை எதுவும் எனக்குப் பெரிசா படவில்லை. ஆரம்பக் காலத்தில் பல இசை ஜாம்பவான்களின் இசையைக் கேட்டிருக்கேன். இன்ஸ்பயர் ஆகியிருக்கேன்.”

ஐந்து பாட்டு, பேக்ரவுண்ட் மியூஸிக் என்று இந்த சிஸ்டம் ஒரு கட்டத்தில் சற்று சலிப்பைத் தருகிறதா?

“அப்படிச் சொல்ல முடியாது. எனக்குப் பிடிச்சது சினிமாதான். பாட்டு மட்டுமல்ல; படத்தில் பேக்ரவுண்ட் ஸ்கோர் இருப்பதைப் பலர் கவனிப்பதில்லை. ‘Beyond the Soul’ என்கிற ஹாலிவுட் படத்திற்கு மியூஸிக் போட்டிருக்கேன். படத்தோட ஒரு பகுதி கேரளாவில் நடப்பதாகக் கதை. அதற்கு பஞ்சவாத்யமெல்லாம் பயன்படுத்தியிருக்கேன். விரைவில் ரிலீஸ் ஆகிறது.”

அது என்ன உங்கள் பாடல்களில் நிறைய தர்பார் கானட ராகம்?

(பெரிதாகச் சிரிக்கிறார்) “அந்த ராகம் என்னையறியாமல் எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கு போலிருக்கு”.

உங்கள் குடும்பம்?

“மனைவி சூரியகாந்தம். ஹவுஸ் ஒய்ஃப். மூணு பெண்கள். ஒரே பையன் - ஹர்ஷ்வர்த்தன். ஒண்ணாங்கிளாஸ் படிக்கிறான். இப்பவே நோட்ஸ் எல்லாம் புரியுது அவனுக்கு. ஸ்ருதி சுத்தமா பாடறான். பார்ப்போம்!”

சந்திப்பு : வி. சந்திரசேகரன்
படங்கள் : சித்ராமணி